


# காந்தி கண்காட்சி!



கும்டிப் பூண்டியிலுள்ள எம்.எல்.ராஜேஷ் வீட்டுக்கு சென்றால் வீடு முழுவதும் மகாத்மா காந்தி சிலைகள், பல்வேறு நாடுகள் வெளியிட்டுள்ள காந்தி உருவம் பொதித்த நாணயங்கள், நோட்டுகள் இன்னும் பல அரிய காந்தி தொடர்பான பொக்கிஷங்கள் பரவிக் கிடக்கின்றன. ராஜேஷ் இந்த அரிய பொக்கிஷங்களை தமிழத்திலுள்ள பல்வேறு பள்ளிகளிலும், பொது இடங்களிலும் கண்காட்சி நடத்துகிறார். ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனத்தில் பணிபுரியும் இவர், தனது சொந்த பணத்தில் இக்கண்காட்சிகளை நடத்துகிறார். இவருக்கு இந்த ஆர்வம் எப்படி வந்தது? என்று கேட்டால் புன்னகையுடன் பேசுகிறார்.







"பள்ளியில் படிக்கும் போது ஹாபியாக, ஸ்டாம்ப் சேகரிக்கும் பழக்கம் எனக்கு இருந்தது. ஒரு கட்டத்தில் வெளிநாட்டு தபால்தலைகளை சேகரிக்கும் போது, காந்தியின் தபால்தலைகளை சேகரிக்க நேர்ந்தது. நமது நாட்டில் காந்திக்கு தபால்தலைகள் வெளியிடுவதில் வியப்பில்லை. ஆனால் உலகநாடுகளில் தபால்தலைகள் வெளியிடுவது எனக்கு வியப்பை தந்தது. தொடர்ந்து சேகரிக்க சுமார் 120 நாடுகள், தபால்தலைகள் வெளியிட்டுருப்பதை அறிந்தேன். சிறிது, சிறிதாக இந்நாடுகளிலுள்ள தபால்தலைகளை நண்பர்கள், அந்நாடுகளின் தூதரகங்கள் மூலமாகவும், தொடர்பு கொண்டு தபால்தலைகளை சேகரித்தேன். கம்யூனிச நாடுகளான கியூபா, சீனா, முக்கியமாக காந்தி எதிர்த்து போராடிய ஆங்கிலேய நாடான பிரிட்டனிலும் காந்திக்கு ஸ்டாம்ப் வெளியிட்டு இருக்கிறார்கள். மேலும் 15 நாடுகள் வெளியிட்ட காந்தியின் உருவம் பொறித்த நாணயங்களையும் சேகரித்தேன்.

மேலை நாடுகளின் தாக்கம் அதிகமிருக்கும் இன்றைய நம் நாட்டில் மேலை நாடுகளில் காந்தி மதிக்கப்படும் விதத்தை கண்காட்சியாக சொன்னால், இன்றைய இந்திய இளைஞர்கள் தாமாகவே முன் வந்து காந்தியின் சிந்தனையை தேடி படிப்பார்கள் என்ற எண்ணத்தில், இப்பொக்கிஷங்களையெல்லாம் கண்காட்சியாக நடத்த ஆரம்பித்தேன்" என்று குழந்தையின் குதூகலத்துடன் சொல்லும் ராஜேஷின் இப்பணியை பார்த்து, மகாத்மாவிடம் 1945-48 வரை நேரடி உதவியாளராக இருந்த திரு.கல்யாணம் காந்தியடிகளுக்கு வந்த கடிதங்களின் கவர், கையெழுத்து பிரதிகள் மற்றும் தந்திகள் என பல அரிய பொக்கிஷங்களை இவரின் கண்காட்சிக்கு வழங்கியுள்ளார்.

நவஜீவன், யங் இந்தியா போன்ற காந்தி நடத்திய பத்திரிக்கைகளின் ஒரு சில பிரதிகள் அமெரிக்காவில் இருப்பதை அறிந்த ராஜேஷ் ஏலத்தின் மூலமாக இப்பிரதிகளை அதிக விலை கொடுத்து வரவழைத்தார். தன்னுடைய சம்பளத்தின் பெரும் பகுதிகளை காந்தி தொடர்பான சேகரிப்புகளுக்கே செலவிடுகிறார். "என் மனைவிக்கு ஆரம்பத்தில் இது கஷ்டமாக தெரிந்தது. நாளடைவில் என் பணியை உணர்ந்த பின், என்னை விட அதிகமாக இப்பணிகளில் ஈடுபடுகிறார். வன்முறையும், தீவிரவாதமும், நிறைந்த இந்த சமுதாயத்தில் காந்தியை பற்றி பரப்புவது என் கடமை" என்கிறார். பல நாடுகளில் வைத்துள்ள காந்தியின் சிலையை புகைப்படம் எடுத்து தனது கண்காட்சியில் வைத்துள்ளார். இவரது சேவையை நடிகர் சிவகுமார் நேரில் அழைத்து பாராட்டியுள்ளார். காந்தியின் மறைவு தினமான, ஜனவரி 30ம் தேதி சுமார் ஆயிரம் மாணவர்களுக்கு தலையில் மொட்டை அடித்து, கையில் கம்பை தந்து காந்தி வேடத்துடன் ஊர்வலம் நடத்தினார். இப்பணியை கின்னஸ், லிம்கா புத்தக சாதனைகளுக்காக செய்துள்ளார்.

ராஜேஷிற்கு ஒரு வருத்தம் மட்டும் உள்ளது. காந்தி எந்த ஒரு இனத்திற்காக சப்போர்ட் செய்து சுடப்பட்டு இறந்தாரே, அவ்வினத்தினர் அதிகமாக வாழும் பாகிஸ்தானில் ஒரு சிலை கூட மகாத்மாவிற்கு இல்லாதது வருத்தமளிக்கிறது என்கிறார்.

*- ராமசுப்பிரமணியன்*